## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**O.S.No. 28/2023**

PW1– சேகர் நாள் 13.11.2024

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஓரளவு எழுத படிக்க தெரியும். விவசாயம் செய்கிறேன். 1ம் பிரதிவாதி அரும்பாவூர் மேட்டுரை சேர்ந்தவர். விவசாயத்தை தவிர முடி திருத்தும் தொழில் செய்கிறேன்.நான் நிலங்கள் வாங்கி விற்பதில்லை. தொண்டமாந்துறையை சேர்ந்த ரெங்கராஜ் என்பவர் மூலமாக 1ம் பிரதிவாதியை அணுகினேன். ரெங்கராஜ் வா.சா.ஆ–2 ல் கையெழுத்து எதுவும் போடவில்லை. ரெங்கராஜ் மூலமாக தான் பிரதிவாதியை அணுகி பணம்கேட்டேன் என்ற விவரத்தை பிராதில் சொல்லவில்லை. நான் ரூ.7,50,000/– கடன் வாங்கியதாக சொல்கிறேன். ரூ.5,50,000/– கிரையத்தொகையாக வா.சா.ஆ–2 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதித்தொகைக்கு பாண்டு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பிராதில் பாண்டு கொடுத்த விவரத்தை சொல்லவில்லை. பிராதில் கடனுக்கான வட்டியை எந்த தேதியில் எவ்வளவு ரூபாய் செலுத்தினேன் என்ற விவரத்தை சொல்லவில்லை. ஓராண்டு காலம் வட்டி கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அதன் பிறகு வட்டி கொடுத்ததாக பிராதில் சொல்லவில்லை. ஒப்பந்தம் 1 1/2 ஆண்டுகளுக்கு போடப்பட்டது. அந்த 1 1/2 ஆண்டுகளுக்குள்ளாகவே பொது அதிகாரப்பத்திரம் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த பவர் பத்திரத்தில் எல்லா அதிகாரமும் கொடுத்தேன் என்றால் சரிதான். 10 மாதத்திற்குள் பணத்தை கேட்டார் கொடுக்கமுடியவில்லை என்பதால் அவர் மனைவி பெயருக்கு பவர் எழுதிக்கொடுக்க சொன்னார். அதனால் கொடுத்தேன். இந்த விவரத்தை நான் முதல் விசாரணை வாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லவில்லை. பொது அதிகாரம் எழுதிக்கொடுத்துவிட்டு ஏமாற்றுவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்திலேயே 1ம் பிரதிவாதிக்கோ அல்லது அவர் அதிகாரம் பெற்ற நபருக்கோ எழுதிக்கொடுப்பதாக

குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் செய்த பிறகு வேறு ஒரு நபருக்கு அதிக விலைக்கு பேசி 1ம் பிரதிவாதி என்னை கிரையம் செய்ய அழைத்தபோது நான் மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் ஒப்பந்தப்படி நடக்காததால் தான் பொது அதிகார பத்திரம் வாங்கினார் என்றால் சரியல்ல. நான் அவரிடம் வட்டிக்கு கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சியிடம் அவரது வக்காலத்தில் உள்ள கையெழுத்தை காட்டி கேட்ட போது அவரது கையெழுத்து போல உள்ளதாக தான் ஒப்புக்கொண்டார். பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்தை காட்டி கேட்டபோது தன்னுடைய கையெழுத்து என்று ஒப்புக்கொண்டார். கிரைய ரசீது ஆவணத்தை சாட்சியிடம் காட்டி கேட்டபோது தன்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்று ஒப்புக்கொண்டார். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ–1 ஆகும். நான் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்த போது கிரைய ரசீதும் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன கட்சி செய்கிறார் என்று எனக்கு தெரியாது. பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்த அன்றே முழுகிரையத்தொகையையும் பெற்றுக்கொண்டு நான் கிரைய ரசீது எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் கிரைய ரசீது எழுதிக்கொடுத்ததை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. 2 ஆண்டுகளுக்கு முன்பாக நான் பணத்தை திருப்பிக்கொடுக்க போன போதுதான் இந்த வழக்கில் ஏற்பட்ட ஆவணங்கள் பற்றி தெரிந்துக்கொண்டேன். மேற்படி விவரத்தை இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்று தெரியவில்லை. 15.06.2023ந் தேதி நான் பணத்தை திருப்பி கொடுக்க போனதற்கு என்னிடம் ஆள்சாட்சி தான் உள்ளது. நான் என்னுடைய தேவைக்கு சொத்தை விற்பதற்காக தான் ஒப்பந்தம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் கடனுக்காக ஒப்பந்தம் செய்திருந்தால் அந்த ஒப்பந்தத்தை இதுநாள் வரை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்று சொன்னால் நான் பணத்தை தயார் செய்ய முடியாததால் ஒப்பந்தத்தை ரத்து

செய்ய நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இவ்வழக்கு சொத்தின் பட்டா பொது அதிகார பத்திரம் மூலம் கிரையம் வாங்கியவர் பெயருக்கு மாறிவிட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தஅன்றே நான் பணத்தை பெற்றுக்கொண்டு சுவாதீனம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. இப்போது வரை நான் பயிர் செய்து வருகிறேன். என்னுடைய அனுபவத்தை காட்ட அடங்கல் கணக்கு தாக்கல் செய்யவில்லை. 10.06.2014-ல் 4ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் செல்லாது என்று தான் வழக்கு போட்டுள்ளேன். பொது அதிகாரப்பத்திரத்தை இது வரை நான் ரத்து செய்யவில்லை. நான் எழுதிக்கொடுத்த பொது அதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் ஏற்பட்ட கிரையம் செல்லாது என்று சொல்ல உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் கந்தசாமி ரியல் எஸ்டேட் செய்கிறார் என்றால் சரியல்ல. அவருக்கு நிலம் வாங்கி விற்பதில் அனுபவம் உள்ளது என்றால் சரியல்ல. எனது அண்ணனுடன் எனக்கு அதிக பேச்சுவார்த்தை இல்லை. நான் என் அண்ணனிடம் எல்லா விஷயங்களையும் கலந்து கொள்ள மாட்டேன். நான் என் அண்ணனுடன் ஒற்றுமையாக தான் இருக்கிறேன் என்றும் இவ்வாறு கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டு இல்லை என்று சொல்வது எங்களுடைய வேலை என்றால் சரியல்ல. மலையாளப்பட்டி அத்தியப்பகவுண்டர் மகனுக்கு என் அண்ணன் நிலம் விற்றாரா என்று எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி விவரம் தெரியும் என்றும், அவரிடமும், பணம் அதிகம் கேட்டு தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. என் அண்ணன் பெரம்பலூரில் தான் தொழில் செய்கிறார். என் அண்ணன் பெரம்பலூரில் நிலங்கள் வாங்கி விற்கிறார் என்றால் சரியல்ல. என் அண்ணன் கிரஷர் வைத்து வியாபாரம் செய்தார். தற்போது விற்றுவிட்டார். எனவே எனக்கும், என் அண்ணனுக்கும் கிரைய ஆவணங்கள் பொருத்து அனுபவம் உள்ளது என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தில் என் அண்ணனும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். நான்

கிரையஒப்பந்தத்தை கிரையம் செய்யும் நோக்கத்தில் தான் போட்டேன் என்றும் அதற்காக பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. கிரைய பத்திரத்தை ரத்து செய்ய சொல்லி பரிகாரம் கேட்காமல் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னிடம் ஒப்பந்தம் போட்டு கிரையம் வாங்கி 4ம் பிரதிவாதியிடம் விற்றுவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் கிரையம் செய்ததிலிருந்து தாவா சொத்து பக்கமே போனதில்லை என்றால் சரியல்ல. நான் தினமும் அன்னமங்கலத்திலிருந்து தான் வருகிறேன். நான் கிரையம் கொடுத்ததால் தான் அசல் ஆவணங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டேன் என்று சொல்வது சரியல்ல. அடமானத்துக்கு தான் கொடுத்தேன். அடமானத்துக்கு அசல் பத்திரங்கள் கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு காலாவரை இல்லை என்றால் சரியல்ல. கிளைமேலாளர், பேங்க் ஆப் இந்தியாவை வழக்கில்சேர்த்ததற்கு காரணம் சுதாகர் வங்கியில் கடன் வாங்கியிருந்தார். அவர் கடனை செலுத்திவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. சுதாகர் இன்னொருவருக்கு சொத்தை விற்கபோனார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுதாகர் வேறு ஒருவருக்கு சொத்தை விற்கபோனதால்தான் வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றும், எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.